
# திராவிடத்தால் வாழ்கிறோம்

**1022**

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

# திராவிட மாடல் அரசு

**நீரை.மகேந்திரன்**

**147**




# மூத்த குடிமக்களின் புதிய முகவரி!

## அன்புச்சோலை முதியோர் மனமகிழ் வள மையம்

`முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்' என்று உறுதிமொழி எடுத்துக்கொண்ட நாளில் இருந்து, தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு நமது முதலமைச்சர் செயல்படுத்தி வரும் பல்வேறு திட்டங்களைத் தரவுகளோடு உலகுக்குப் பறைசாற்றுகிறது இந்தப் பகுதி...

வயது முதிர்ந்தோர், மூத்த குடிமக்களின் தனிமையைப் போக்கும் வகையில், திராவிட மாடல் அரசு அறிமுகம் செய்துள்ள திட்டம் அன்புச்சோலை முதியோர் மனமகிழ் வள மையம். முன்னோடி ஆட்சியில் மூத்த குடி மக்களின் புதிய முகவரியாகக் கொண்டாடப் படுகிறது இந்தத் திட்டம். பகல் நேரத்தில் தனிமையில் அவதிப்படும் முதியவர்களுக்கு ஆறுதல் அளிக்கவும், மூத்த குடிமக்களிடையே சமூக தொடர்புக்கான சூழலை உருவாக்கவும், குடும்ப உறுப்பினர்கள் மற்றும் முதன்மை பராமரிப்பாளர்களுக்கு மன அமைதியை வழங்கவும், அவர்களின் அன்புக்குரியவர்கள் நன்கு பராமரிக்கப்படுகிறார்கள் என்பதை உறுதி செய்யும் வகையிலும் இந்த அன்புச் சோலை செயல்படும்.


2025-26 ஆம் நிதி ஆண்டுக்கான வரவு செலவு அறிக்கையில், 'மூத்த குடி மக்களுக்கான பல திட்டங்கள் அறிவிக்கப்பட்டன. அந்த அறிவிப்புகளில் 'மானுட வாழ்வின் தவிர்க்க இயலாத கட்டமான முதுமையில், மூத்த குடிமக்கள் தனிமை, மருத்துவ நலன் மற்றும் பொருளாதார சார்பு உள்ளிட்ட பல்வேறு சவால்களை எதிர்கொள்ள நேரிடுவதைத் தடுக்கும் வகையில் அன்புச்சோலை மையங்கள் அமைக்கப்படும்' என அறிவிக்கப்பட்டது. பகல் நேர பாதுகாப்பு மூத்த குடிமக்களின் முழுமையான பராமரிப்புக்கு என சென்னை பெருநகராட்சி, மதுரை, கோயம்புத்தூர், திருச்சி, சேலம், திருப்பூர், ஈரோடு, தூத்துக்குடி, வேலூர், தஞ்சாவூர் மற்றும் திண்டுக்கல் உள்ளிட்ட மாநகராட்சிகளில் 25 மையங்கள் அமைக்கப்படும். அதற்காக 10 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்தும் தமிழ்நாடு அரசு அறிவித்தது.

இந்த பகல் நேர பாதுகாப்பு மையங்களில் முதியவர்கள் தோழமை உணர்வுடனும் பயனுள்ள பணிகளிலும் ஈடுபடலாம். பகல் நேர பராமரிப்பு, உதவி, அத்தியாவசிய மருத்துவ பராமரிப்புக்கான ஏற்பாடுகள் மற்றும் பொழுதுபோக்கு நடவடிக்கைகள் உள்ளிட்ட பல்வேறு சேவைகள் வழங்கப்படும்.

தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் துணையுடன் இந்த அன்புச் சோலைகள் செயல்படும் என்றும் தமிழ்நாடு அரசு வரவு செலவு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது. அதன்படி, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறையின் கீழ், அன்புச்சோலை முதியோர் மனமகிழ் வள மையம் என்கிற

- 25 அன்புச்சோலை மையங்கள்
- ஒரு மாநகராட்சிக்கு 2 வீதம் 10 மாநகராட்சிகளில் 20 மையங்கள்
- சென்னை பெருநகர மாநகராட்சியில் 3 மையங்கள்
- இராணிப்பேட்டை கிருஷ்ணகிரியில் தலா ஒரு மையம்.

பெயரில் அமையப்பெற்ற மையங்களை முதலமைச்சர் அவர்கள் 10.11.2025 அன்று திருச்சி மாவட்டத்தில் நேரில் தொடங்கி வைத்தார்.



13 மாவட்டங்களில் 25 இடங்களில் செயல்படும் இந்த மையத்தில், பகல்நேர பராமரிப்பு உதவி, அத்தியாவசிய மருத்துவ பராமரிப்புகள், பொழுதுபோக்கு நடவடிக்கைகள் உள்ளிட்ட பல்வேறு சேவைகள் வழங்கப்படும். குறிப்பாக, மதுரை, கோவை, திருச்சி, சேலம், திருப்பூர், ஈரோடு, தூத்துக்குடி, வேலூர், தஞ்சாவூர், திண்டுக்கல் ஆகிய 10 மாநகராட்சிகளில் தலா 2 மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. சென்னை பெருநகர மாநகராட்சியில் 3 மையங்களும், ராணிப்பேட்டை கிருஷ்ணகிரியில் தலா ஒரு மையமும் அமைக்கப்பட்டுள்ளன.





> 13 மாவட்டங்களில் 25 இடங்களில் செயல்படும் இந்த மையத்தில், பகல்நேர பராமரிப்பு உதவி, அத்தியாவசிய மருத்துவ பராமரிப்புகள், பொழுதுபோக்கு நடவடிக்கைகள் உள்ளிட்ட பல்வேறு சேவைகள் வழங்கப்படும்.

### அமைக்கப்பட்டுள்ள வசதிகள்

பொழுதுபோக்கு அம்சங்கள், யோகா, நூலகம் மற்றும் முதியோருக்கு தேவையான திறன் மேம்பாட்டு சேவைகள் வழங்கப்படும். குறிப்பிட்ட நாளில் மையத்துக்கு வருகை தரும் முதியவர்களுக்கு, மதிய உணவு மற்றும் சிற்றுண்டிகளை இந்த மையம் வழங்கும். விரிவான பராமரிப்பை உறுதி செய்வதற்காக, தகுதி வாய்ந்த பராமரிப்பாளர்கள், சமூக சேவையாளர்கள் மற்றும் உடல் சிகிச்சையாளர்கள் பணி யமர்த்தப்படுவர். முதியோர்களுக்கான சுகாதார பரிசோதனைகளுக்கு, அருகிலுள்ள நகர்ப்புற ஆரம்ப சுகாதார மையங்களின் சேவைகள் பயன்படுத்தப்படும். இந்த அன்புச்சோலை மையத்துக்கு முதியோர் சென்றுவருவதற்கு வசதியாக, போக்குவரத்து வசதியுள்ள இடங்களில் இந்த மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்தத் திட்டத்தின் மூலம், 60 வயதுக்கு மேற்பட்டவர்கள் பயனடைவார்கள்.

ஒவ்வொரு அன்புச்சோலையிலிருந்தும், குறைந்தது 50 முதியவர்கள் பயனடைவார்கள். பகல் நேரத்தில் முதியவர்களுக்கு பாதுகாப்பான மற்றும் ஆதரவான சூழல் உறுதி செய்யப்படும். மூத்த குடிமக்கள் தங்கள் வயதினருடன் ஒன்றிணைவதற்கான வாய்ப்பு வழங்கப்படுகிறது. குறிப்பாக, நாளிதழ்கள், பருவ மாத இதழ்கள் ஆகியவையும் கொண்ட முதியோர் நூலகமும் அமைக்கப்பட்டுள்ளன.

மனித மாண்பைப் போற்றும் அரசின் மகத்தான சேவைகளில் அன்புச்சோலை உச்சம் பெறட்டும். உலகம் பரவட்டும்!

...சாதனை தொடரும்

**வழங்கப்படும் சேவைகள்!**

நூலகம், காலை, மாலை, சிற்றுண்டி, மதிய உணவு, யோகா, சுகாதாரச் சேவைகள் மனமகிழ் விளையாட்டுகள்.

## தெளிவாக இருக்கிறது, தமிழ்நாடு!

'பீகார் தேர்தலில், பின்னெடுப்பு அரசியலை வெற்றிபெற வைத்த, ஆதரவு சக்திகளைப் போல தமிழ்நாட்டில் இயங்குபவர்களுக்கு இங்கு இடமே கிடையாது' என முகநூலில் பதிவிட்டுள்ளார் பேராசிரியர் குமரவேல் என்பவர்.

அவரது பதிவில், "இந்தியாவிற்கே மகளிர் உரிமைத்தொகைக்கு முன்னோடி தி.மு.க.தான்! பெண்களின் வாக்குகளை அறுவடை செய்வதல்ல இதன் நோக்கம். பெண்களின் உயர்வில் மேலும் ஒரு படியை அவர்களுக்கு முன்பாக கட்டமைப்பதுதான் அதன் நோக்கம். ஆனால், மகளிர் உரிமைத்தொகைக்கு எதிராக தமிழ்நாட்டில் கூக்குரல் எழுப்பும் பா.ஜ.க. கூட்டணி, நிதீஷ்குமார் வழியாக தேர்தல் நடத்தை விதிமீறலில் ஈடுபட்டு, பெண்களின் முன்னேற்றம் என்பதன் அடிப்படையில் அல்லாமல் வாக்குப்பெட்டிக்குள் அவர்களை விழவைக்கும் நோக்கில், உரிமைத் தொகையை வழங்கினார்கள் பீகாரில்.

சிராக் பஸ்வான் போன்ற அம்பேத்கரைத் தவறாகப் பயன்படுத்தும் தலித் போலிகளும், இஸ்லாமியர்மீது அதிகாரங்களை கட்டவிழ்க்கின்ற பா.ஜ.க.வின் கூட்டணிக் கரங்களை மறைமுகமாக ஆதரிக்கின்ற ஓவைசி போன்ற சூத்திரதாரிகளும் மீண்டும் பீகாரில் பின்னெடுப்பு அரசியலை, வெற்றிபெறச் செய்துவிட்டார்கள்.

65 லட்சம் வாக்காளர்களை, தேர்தலில் வாக்களிக்க விடாமல் செய்த தேர்தல் ஆணையமும் பா.ஜ.க. கூட்டணியின் வெற்றிக்கு ஊதுகுழல் ஆகிவிட்டது.

ஆனால், தமிழ்நாடு மிகத் தெளிவாக இருக்கிறது. பெண்களின் உண்மை வளர்ச்சியை முன்னெடுக்கும் மகளிர் உரிமைத்தொகை, பெண்களின் சொத்துரிமை, விடியல் பேருந்துப் பயணம், பிங்க் ஆட்டோ திட்டம், தோழி விடுதி திட்டம், வேலைவாய்ப்பு, நிர்வாகப் பணிகள், அரசியல் பதவிகளில் பெண்களுக்கான இட ஒதுக்கீடு என பெண்களின் தொடர் முன்னேற்ற வாய்ப்புகள் தி.மு.க.வால் சாத்தியப்பட்டிருக்கிறது தமிழ் மண்ணில். ஒடுக்கப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர், இசுலாமியர், கிறித்துவர் சார்ந்த சமூக நீதி பாதுகாப்பு அரண் தி.மு.க. என்பதை எல்லோரும் அறிவர். பா.ஜ.க.வின் பக்கம் நகரும் சிராக் பஸ்வான்கள் இங்கு கிடையாது; ஓவைசிகளுக்கு இங்கு இடமே கிடையாது. தமிழ்மண் மிகத் தெளிவாக நிற்கிறது'. எனக் குறிப்பிட்டுள்ளார்.

## ஃப்ளாஷ்பேக்





ச.சந்தோஷ்குமார்

### பிறந்த நாளில் தலைவரிடம் வாழ்த்து!

2015-ஆம் ஆண்டு ஜூலை 8-ஆம் தேதி எனது பிறந்தநாளை முன்னிட்டு, சென்னை அண்ணா அறிவாலயத்தில், அன்றைய கழகப் பொருளாளர் – இன்றைய கழகத் தலைவர், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களைச் சந்தித்து வாழ்த்துகளைப் பெற்று புகைப்படம் எடுத்து மகிழ்ந்தேன். இந்தப் புகைப்படம் எனது வாழ்நாள் பொக்கிஷமாக அமைந்தது.

– ச.சந்தோஷ்குமார்,
துணை அமைப்பாளர், கழக மாணவர் அணி,
அண்ணா நகர் தெற்கு.

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை – 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## நம் வரலாறு... (ம்ஊருக)

### அழகிரி அச்சகம்!

1958-ஆம் ஆண்டு, ஆகஸ்ட் 10-ஆம் தேதியில் இருந்து, சில நிர்வாக காரணங்களுக்காக தற்காலிகமாக நிறுத்தப்பட்ட 'ஹோம் லாண்ட்' இதழ், மீண்டும் 1958-ஆம் ஆண்டு டிசம்பர் 7-ஆம் தேதி இதழில் இருந்து வெளிவரத் தொடங்கியது. 1957-ஆம் ஆண்டு முதல், 1959-ஆம் ஆண்டு செப்டம்பர் வரை 'ஹோம் லாண்ட்' இதழை அச்சிட்ட அச்சகத்தின் பெயர் அழகிரி அச்சகம் என இடம்பெற்றிருந்தது.

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by D.Karthikeyan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.